# இரட்சிப்பு நவம்பர் 2024 யுனிகோடு

## இயக்குநர் கடிதம்...

FROM THE MISSION DIRECTOR'S DESK

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே! இவ்வாண்டின் 11வது மாதத்தை காணக் கிருபை பாராட்டின நமது ஆண்டவருக்குத் துதி தோத்திர பலிகளை ஏறெடுப்போம். அனைவருக்கும் எங்கள் அன்பான குழந்தைகள் தின மற்றும் அட்வென்ட் கால நல்வாழ்த்துக்கள். நவம்பர்-14ம் நாள் குழந்தைகள் தினத்தைக் கொண்டாடுகிறபோது, குழந்தைகளை நேசித்த இயேசுவின் அன்பை நம் பிள்ளைகளுக்கு எடுத்துரைப்போம். வரும் டிசம்பர் 1ம் தேதி இவ்வாண்டின் அட்வென்ட் காலம் ஆரம்பமாகிறது. அட்வென்ட் வாழ்த்துக்களை ஒருவருக்கொருவர் பகிர்ந்துகொண்டு இயேசுவின் முதலாம்-இரண்டாம் வருகை குறிந்த சிந்தையில் நிலைத்திருப்போம். இம்மாதம் 1, 2 தேதிகளில் முறையே ~சகல பரிசுத்தவான்களின் திருநாள்| மற்றும் ~சகல ஆத்துமாக்களின் திருநாள்| ஆகியவற்றை நாம் ஆசரித்திருப்போம். கிறிஸ்துவுக்காக தியாகம் செய்த புனிதர்களின் வாழ்வு, குடும்பம்-திருச்சபையில் நமது முன்னோரின் விசுவாச-நன்மாதிரிகள் நமக்கு ஆசீர்வாதமாக அமைய ஜெபித்துக்கொள்வோம்.

நமது ஊழிய திட்டங்களான ~ஜெப-ஜன்னல்| ஜெப நேரங்கள் (நவம்பர் 8, 15, 22), ~அனைவரும்-ஊழியத்தில்| - கைபிரதி ஊழிய திட்டம், ~வேதாகம போட்டிகள்| ஆகிய வற்றில் பங்குபெற உங்களை அன்புடன் அழைக்கிறோம். நமது பத்திரிக்கை ஊழியங்கள், காணொலி-செய்தி ஊழியங்கள், வலைதள ஊழியங்கள் (றறற.சயவஉhippர.உழஅ), புத்தக-வெளியீட்டு ஊழியங்கள், கைப்பிரதி ஊழியங்கள், மிஷனரி ஊழியங்கள், திருச்சபை ஊழியங்கள் ஆகிய நம் அனைத்து ஊழியங்களுக்காகவும் ஜெபித்துக்கொள்ளுங்கள்.

ஜெப-விண்ணப்பங்கள், அனுபவ சாட்சிகள் மற்றும் காணிக்கைகள் அனுப்புவோர் நமது ஊழிய இயக்குநரின் பெயருக்கு அனுப்பிவையுங்கள் (தகவல் தொடர்பு விபரம், வங்கி விபரம், ரிi விபரம் மற்றும் ஙச உழனந ஆகியவை பக்கம் 18-ல் தரப்பட்டுள்ளன). தேவகிருபை உங்களோடு இருப்பதாக. ஆமென்.

கிறிஸ்துவின் பணியில்

அருட்திரு. எஸ்.ஜே.டி. தர்மராஜா

---

# நமது ஊழிய இயக்குநரின் நன்றி அறிவிப்பு

கர்த்தர் எனக்கு செய்த எல்லா உபகாரங்களுக்காகவும், அவருக்கு என்னத்தை செலுத்துவேன். இரட்சிப்பின் பாத்திரத்தை எடுத்துக்கொண்டு, கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுவேன். சங் 116:12,13

கர்த்தருடைய பெரிதான கிருபையால் எங்கள் மகள் **திருமதி. லில்லி புஷ்பம் ஷைனி** அவர்களின் திருமணம் இம்மாதம் 1ம் தேதி சென்னையிலுள்ள தூய.ஜார்ஜ் பேராலயத்தில் சிறப்பாக நடைபெற்றது (**மணமகன்: திரு. ஜேம்ஸ் சிஜூ**).

திருமண ஆராதனை, திருமண வரவேற்பு மற்றும் திருமண விருந்தில் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்திய உங்கள் அனைவருக்கும் நமது ஆண்டவரும் அருமை இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிய திருப்பெயரில் எங்கள் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம். கர்த்தர்தாமே உங்களையும் உங்கள் குடும்பத்தாரையும் ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

அருட்திரு. எஸ்.ஜே.டி. தர்மராஜா

திருமதி. ஜெ. ஜெனட் ஜெயசீலி

## ஜெப-ஜன்னல் ஜெப-விண்ணப்பங்கள்

**கர்த்தரை நோக்கி மன்றாடுவோம் - COME LET US ALL INTERCEDE TO GOD**

1) அகில உலக சமாதானத்துக்காக... இஸ்ரேல்-ஹாமாஸ், இஸ்ரேல்-ஈரான் மற்றும் உக்ரைன்-ரஷ்யா இடையேயான போர் முடிவுக்கு வர... இலங்கை, பாகிஸ்தான் மற்றும் பங்களாதேஷ் பொருளாதாரம் சீரடைய... இயற்கைப் பேரிடர்களின் சேதங்களிலிருந்து மக்கள் பாதுகாக்கப்பட... உலகெங்கும் நடைபெறும் ஒலிம்பிக் போட்டிகளில் விளையாட்டு வீரர்களுக்கும் பொதுமக்க ளுக்கும் போதிய பாதுகாப்பு கிடைக்க...

2) இந்திய மக்களின் நல்வாழ்வுக்காக... இந்தியாவில் மதவாதம், பிரிவினைவாதத்தை ஊக்குவிப்பவர்களின் சூழ்ச்சிகள் முறியடிக்கப்பட... சிறுபான்மையினருக்கு எதிரான ஒடுக்குதல்கள் நிறுத்தப்பட... நீதிமன்றங்களில் நீதியரசர்கள் பாரபட்சமின்றி நீதி வழங்க... இந்திய ஒன்றிய அரசு ஜனநாயக மரபுகளை மதித்து அனைத்து தரப்பு மக்கள் நலனுக்காகவும் பாரபட்சமின்றி செயல்பட...

3) தமிழ்நாட்டு மக்களின் நல்வாழ்வுக்காக... மக்கள், இன - மத - மொழி வேறுபாடின்றி அமைதியாக வாழ... தமிழ்நாட்டில் விவசாயம், தொழில்கள், வியாபாரம் சிறக்க... அரசியல் குழப்பங்கள் முடிவுக்கு வர... தமிழ்நாட்டில் மத-வாத பிரிவினை-வாத அரசியல் சக்திகள் கட்டுப்படுத்தப்பட...

4) திருமதி. சுமி ஜேஸ்மின், திருமதி. மெர்லின், திருமதி. பாக்கியா, திருமதி. திலகவதி மகேஷ், திருமதி. வைலட், திருமதி. சுதா, திருமதி. பிரியா சுதிர், திருமதி. புஷ்பாவதி, திருமதி. ஹனா விஜய் ஆகியோருக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க...

5) பிரி-கே.ஜி முதல் பிளஸ்-2 வரையில் கல்வி பயிலும் நம் பிள்ளைகளுக்காக... தொழில்-முறைக் கல்வி மற்றும் கல்லூரிக் கல்வி பட்டப்படிப்புகளுக்கான கலந்தாய்வுகள், நேர்முகத் தேர்வுகளை சந்திக்கும் பிள்ளைகளுக்கு தேவையான ஞானம் வழங்கப்பட...

6) உயர்-கல்வி பயிலும் நம் பிள்ளைகள் எஸ்தர் பெரின், ஜேசன், சிப்ரா, ஜாஸ்மின், ஜாஷ்வா மேத்யூ, வில்சன், னச. கிறிஸ்டினா, கிப்ட்சன் தங்கராஜ், பிரின்ஸ் ஜேக்கப், ஜெனிபர், சிந்தியா பிரகாஷ் ஆகியோருக்கு சிறந்த ஞானம் வழங்கப்பட...

7) திருமதி. லீலா டேவிட், திரு. சுகிர்தராஜன், திருமதி. ஜேஸ்மின் ஞானதாஸ், சநஎ. கருணா கரன், திரு. நெல்சன் (நகோமி), திரு. வெஸ்லி சாமுவேல், திரு. சுந்தர்சிங், திரு. டெம்பிள் வில்லியம், திருமதி. அன்னாள் ஜெபக்கனி, திரு. அப்பன் டேவிட், திருமதி. ஃபிளாரன்ஸ் ராஜமணி, திரு. ஜூலியன், திரு. அருள்சிங் ஆகியோரின் சரீர சுகத்திற்காக...

8) திரு.டி. மனோகர், திரு.பி.எச். ஜெயச்சந்திரன், திரு. ஹேமில்டன், திரு. யாபேஸ் சாமுவேல், திருமதி. பால், திருமதி. ராஜேஷ்வரி, திரு. டேனியல், திருமதி. ஐரீன் வாக்கர், திருமதி. ஞானம் ஜெபராஜ், திருமதி. சுந்தரிபாய், திருமதி. ஞானம் ராஜசேகர், திருமதி. செல்வி பாண்டியன், னச. ஷீபா, திருமதி. ஜலீன் செல்லத்துரை, திருமதி. ரத்னாபாய் சாம், திருமதி. வசந்தா அன்பன், திருமதி. சுகிர்தா சின்னதுரை ஆகியோரின் குடும்ப ஆசீர்வாதங்களுக்காக.

9) நமது ஊழிய ஆதரவாளர்களான திருமதி. ஐரீன் வாக்கர், திருமதி. கிரேஸ் திவ்யா, திருமதி. அரோமா சாத்ராக், திரு. சாம்சன் ஆபிரகாம், திருமதி. நிறைமதி ஜாண்ஸன், திரு. எஸ்.ஜே.பி. ராஜா, திரு. அசரியா ஞானதாஸ், திருமதி. வனஜா ஹெர்பர்ட் ஆகியோரின் குடும்பத்தாருக்காக..

தேவசெய்தி

# குழந்தைகளை வளர்த்தல் மற்றும் பயிற்றுவித்தல்



## NURTURING AND TRAINING CHILDREN

Rev. D. Mohanraj

“இயேசு ஞானத்திலும் உடல் வளர்ச்சியிலும் மிகுந்து கடவுளுக் கும் மனிதருக்கும் உகந்தவராய் வாழ்ந்து வந்தார்.” லூக்கா-2:52

அன்பான இரட்சிப்பு இதழ் வாசக பெருமக்களே!

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனியத் திருப்பெயரில் உங்கள் அனைவருக்கும் அன்பின் வாழ்த்துகள். நவம்பர் மாத இரட்சிப்பு இதழ் மூலம் உங்களை சந்திப்பதில் பெருமகிழ்ச்சி. இம்மாதம் சிறுவர்களை சிறப்பிக்கும் குழந்தைகள் தினத்தைக் கொண்டாடும் மாதம், எனவே அவர்களை சிறந்தவர் களாக வளர்த்தெடுப்பது மற்றும் பயிற்றுவிப்பது குறித்து சற்றே தியானிப்போம்.

குழந்தைகளை வளர்த்தெடுப்பதும் அவற்களை பயிற்றுவிப்பதும் நமது கடமை. இக்கால சூழலில் நமது பிள்ளைகளைக்குறித்த கரிசனையை வளர்த்துக்கொள்ள வேண்டியது மிகவும் அவசியம் ஆகும்.

இன்று குழந்தைகள் பல்வேறு பிரச்சனைகளை சந்தித்து வருகிறார்கள். படிக்கும் பிள்ளைகளை வன்முறைகளில் ஈடுபடுத்துவது, குழந்தைகள் என்றும் பாராமல் அவர்களைக் கொன்று குவிப்பது போன்ற செயல்கள் வேதனைக் குரியவை. மாணவர்கள் சக-மாணவர்களிடம் வன்முறையில் ஈடுபடுவதும், சக-மாணவர்களை அடித்துக் கொல்வதும், சாதாரண நிகழ்வாக மாறிவிட்ட நிலை பரிதாபத்திற் குறியதாகும். உணவு இல்லாததால் இரத்த சோகையில் வாழும் நிலை, ஊட்டச்சத்து இல்லாததால் நோயுற்ற நிலை என நமது பிள்ளைகள் வளர்வதும் வேதனைக்குரிய ஒன்று.

நமது பிள்ளைகளை இப்படிப்பட்ட சூழ்நிலைகளிலிருந்து பாதுகாப்பதும், பிறரைக் குறித்த கரிசனை உடையவர்களாய் அவர்களை வளர்ப்பதும் நமது தலையாய கடமை. இந்த சிந்தனையுடன் லூக்கா 2ம் அதிகாரம் 41முதல் 52 வரையுள்ள திருமறைப் பகுதியை என்னுடன் இணைந்து சிந்திக்க உங்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**1. வியத்தகு ஞானம்:**

இயேசுவின் பெற்றோராகிய யோசேப்பு-மரியா ஆகியோர் கொண்டிருந்த மிகச் சிறந்த பழக்க வழக்கங்களில் ஒன்று எருசலேம் ஆலயத்திற்கு குடும்பமாக செல்லுதல், ஆண்டவரை வழிபடுதல், பண்டிகைகளைக் கொண்டாடுதல் (வச.23, 24, 41, 42). தங்களது அந்த வழக்கப்படி அவர்கள் தங்கள் மகனாகிய இயேசுவை பயிற்றுவிக்கும் வகையில் இயேசுவை எருசலேம் தேவாலயத்துக்கு அழைத்துச்செல்கிற நிகழ்ச்சியை இங்கு நாம் வாசிக்கிறோம்.

இன்று ஆலயத்திற்குச் செல்லுதல், திருச்சபையின் விழாக்களிலும் கொண்டாட்டங் களிலும் கலந்துகொள்ளுதல் போன்றவற்றில் நமது பழக்க வழக்கம் எப்படி உள்ளது? நமது பிள்ளைகளை ஆலயத்திற்கு அழைத்துகொண்டு வரும் பழக்கம் நம்மிடம் இருக்கிறதா? நமது பிள்ளைகள் ஞானத்தில் வளர்வதற்கு இந்த பழக்க வழக்கம் மிக மிக அவசியமான ஒன்றாகும். இயேசு ஞானத்தில் வளர்ந்தார். கர்த்தருக்கு மற்றும் இறை வார்த்தைகளுக்கு பயப்படும் பயம், கர்த்தருடைய வார்த்தைகளை கேட்கும் ஆர்வம், அதைப் புரிந்துக்கொள்ளும் ஆற்றல், திருமறை குறித்து கேள்விகளை கேட்கும் துணிச்சல், திருமறை வசனங்கள் குறித்த பிறருடைய கேள்விகளுக்கு பதிலளிக்கும் ஆர்வம் மற்றும் திறன் ஆகிய இயேசுவின் தாலந்துகள் அனைவரையும் வியப்பில் ஆழ்த்தின (வச. 46, 47).

திருமறையைப் படிப்பதாலும் அதைத் தியானிப்பதாலும் வரும் நல்ல பழக்க வழக்கங்கள் நமக்கு, பிறர் வியக்கத்தக்க ஞானத்தையும், அறிவாற்றலை யும், வளர்ச்சிகளையும் தரும் என்பது இயேசுவின் வாழ்விலிருந்து நாம் கற்றுக் கொள்ளும் உண்மையாகும். எனவே, இயேசுவின் பெற்றோரைப் போன்று, நாமும் நமது பிள்ளைகளை இக்காரியங்களில் பயிற்றுவிப்போம்.

**2. உடல் வளர்ச்சி:**

“இயேசு ஞானத்திலும் உடல் வளர்ச்சியிலும் சிறப்பு மிகுந்தவராய்” வளர்ந்தார் என்று திருமறை (லூக்கா-2:52மு) நமக்குச் சொல்லுகிறது.

இன்று நமது வாழ்விடங்களிலுள்ள பல சிறுவர்-சிறுமியர் தீய நட்பு, தீய பழக்க வழக்கங்கள் போன்ற காரணங்களாலும், ஊட்டச்சத்துக் குறைபாடால் ஏற்படும் தொற்று, ஒவ்வாமை, இரத்த-சோகை போன்ற நோய்களின் காரணமாகவும் உடல் மெலிந்து, வலிமை இழந்து வாழ்ந்துக்கொண்டிருப்பதைப் பார்க்கிறோம்.

சிறுவர்-சிறுமியரின் இந்நிலைக்கு, பொருளாதார பிரச்சனை, கூடா-நட்பு (பள்ளி, கல்லூரி சூழல்கள்), குடும்ப பிரச்சனைகள் (குடி, வெறி, சண்டை போன்ற, பெற்றோரின் தீய பழக்க வழக்கங்கள்), சமய-ஈடுபாடு, பக்தியின்மை, தீய நாட்டங்களுடன் கூடிய அரசியல் ஈடுபாடு, ஆடம்பர வாழ்வுக்கான ஈர்ப்பு போன்ற பல காரணங்கள் உண்டு.

நமது பிள்ளைகள் இன்று எப்படிப்பட்ட பழக்க வழக்கங்களில், சூழல்களில் வளர்கிறார்கள் என்பதை பெற்றோராகிய நாம் அறிந்திருக்க வேண்டும். இதற்கு பிள்ளைகளைக் குறித்த

பாரம், அவர்களுக்காக ஜெபிப்பது, அவர்களுக்கு ஊட்டச்சத்துக்கள் நிறைந்த நல்ல உணவை வழங்குவது (இன்று உள்ள நுகர்வு கலாச்சாரத்தில் நம் பிள்ளைகள் எப்படிப்பட்ட உணவுகளை எடுத்துக் கொள்கிறார்கள் என்பதை சிந்திப்போம்) போன்ற காரியங்களில் விழிப்புணர்வுடன் செயல்படுவது மிக மிக அவசியம் ஆகும். நமது பிள்ளைகள் மற்றும் மாணவர்களின் சுத்தம், சுகாதாரம், ஆரோக்கியம், நடை, உடை, பாவனை போன்ற வற்றில் நாம் சற்று அக்கரை காட்டுவோமா?

**3. கடவுளுக்கும் மனிதருக்கும் உகந்த வாழ்வு:**

கிறித்தவ வாழ்வு, 'எப்படியும் வாழலாம்' என்பதா? கிறிஸ்துவுக்கு ஏற்புடையவராக வாழ்வதா? பவுல் தன்னை முற்றிலும் கிறிஸ்துவுக்கு அர்ப்பணித்தார். "நான் வாழ்ந்தால் அது கிறிஸ்துவுக்காகவே; நான் இறந்தால் அது எனக்கு ஆதாயமே" (பிலி-1:21) என பவுல் கூறுகிறார்.

இயேசுவும், தன்னைத் தேடி வந்த தன் தாய் தந்தையை பார்த்து கேட்கிறார். "நீங்கள் ஏன் என்னைத் தேடினீர்கள்? நான் என் தந்தையின் அலுவல்களிலில் ஈடுபட்டிருக்க வேண்டும் என்பது உங்களுக்குத் தெரியாதா?" என்று. இவ்வாறாக இயேசுவானவர், கடவுளுக்கு ஏற்புடையவராகவும் அதேசமயம், போல் மனிதருக்கு ஏற்புடையவராகவும் வாழ்ந்து காட்டினார். நாமும், இயேசுவைப்போல், கடவுளுக்கு பயந்து தூய உள்ளத்தோடு, உண்மையுடனும், நீதியுடனும் பிறருக்கு நன்மை செய்து வாழ்வது கடவுளுக்கு உகந்த வாழ்வாகும். இன்றைய குழந்தைகள், பெற்றோருக்குக் கீழ்ப்படிவது, பெரியோரையும், சிறியோரையும் மதித்து வாழ்வது, ஏழை எளிய மக்களுக்கு உதவி செய்வது, துன்பங் களில் வாழும் மக்களுக்காக ஜெபத்துடன் உதவுவது, விடுதலைத் திருப்பணிகளில் ஈடுபடுவது போன்றவற்றில் பயிற்றுவிக்கப்பட வேண்டும். அவ்வாறன வாழ்வே கடவுளுக்கும் மனிதருக்கும் உகந்த வாழ்வு என இயேசுவின் வாழ்வு நமக்குச் சான்றளிக் கிறது. இன்று நம் பிள்ளைகள் கடவுளுக்கும் மனிதருக்கும் ஏற்புடையவர்களாக வாழ்கிறார்களா? என்பதை சிந்தித்து செயல்பட அழைக்கப்படுகிறோம்.

பிள்ளைகள் கடவுள் அளித்த பரிசு, இயேசு அவர்களை ஏற்று அரவணைக்கிறார் மற்றும் அவர்களை ஆசீர்வதிக்கிறார். அவர்கள் ஆண்டவருக்குரியவர்கள். நாமும் அவர்களை நேசித்து அரவணைத்து ஆசீர்வதித்து வழிநடத்துவோம். மூவொரு கடவுளின் அன்பும், அருளும் ஆசீர்வாதமும் உங்கள் அனைவரோடும் இருப்பதாக. ஆமென்.

அருட்திரு. டி. மோகன்ராஜ், ஆயர் மற்றும் தலைவர், தூய. பேதுருவின் ஆலயம்,
சி.எஸ்.ஐ. வியாசர்பாடி குருசேகரம், சென்னைப் பேராயம்,
வியாசர்பாடி, சென்னை-39. தென்னிந்தியா.

==========================================================================================

## வேத ஆராய்ச்சி

# சங்கீதங்கள் கற்றுத்தரும் விலையேறப்பெற்ற சத்தியங்கள்

சங்கீதம்-90 எப்பிசோடு-90 AUTHOR: REV.DR. D.SURESH RAJAN

முன்னுரை:

**நமது ஆலயங்களில் பொதுவாக வருட இறுதி ஜெப நேரத்திலும் மட்டுமல்லாமல், வயது சென்று மரித்தவர்களின் இல்லங்களிலும் இச்சங்கீதத்தை பயன்படுத்துவதை நாம் கண்டிருக்கிறோம். இத்தகைய சூழ்நிலைகளுக்கு ஏற்றதாக இச்சங்கீதத்தின் வரிகள் காணப்பட்டாலும் உண்மையில் இது மிக ஆழமான சத்தியங்களை உள்ளடக்கியதாகும். இந்த இறைவேண்டலை இயற்றிய கடவுளின் மனிதனாகிய மோசே வனாந்தரத்தில் வயது முதிர்ந்த இஸ்ரவேலர்கள் மடிந்துபோன சூழ்நிலையில் எழுதியிருக்கலாம் என்று வேத அறிஞர்கள் கருதுகின்றனர்.**

1. நித்தியமான கடவுள்: (வச 1-4)

**காலங்களை கடந்தவர் கடவுள் என்பதை நாம் அறிந்திருக்கிறோம். இறைவன் துவக்கமும் முடிவும் இல்லாதவர் என்று நாம் சொல்லுகிறோம். "ஆதியும் அந்தமும் அவரே அல்பாவும் ஒமேகாவும் அவரே" (வெளி 22:13) என திருமறை சொல்லுகிறது. 5 ஆகமங்களைத் தொகுத்து எழுதிய மோசே, அண்ட சராசரங்களின் படைப்புக்கும் முன்பே நித்திய-நித்தியமாய் உள்ளவர் கடவுள் என்பதை விவரிக்கிறார். "மலைகள் தோன்று முன்பே, பூமியும் உலகும் உண்டா கும் முன்பே, ஊழிக்காலமாக இறைவா, நீர் இருக்கிறீர்" (வச-2, க.வே.1973). அறிவியலானது, உலகம் உண்டாக்கப்பட்டு பல்லாயிரம் ஆண்டுகள் ஆகியிருக் கலாம் என்று கணித்துச் சொல்லும் இந்நாட்க ளில், "உமது பார்வைக்கு ஆயிரம் வருடங்கள் நேற்றுக்கழிந்த நாள்போலவும் இரவு வேளை போலவும் இருக்கிறது" (வச-4, IRV). என்று கூறியிருப்பது வேதத்தின் கூற்றுகள் அறிவியல் கணிப்பிலிருந்து மாறுபட்டவை அல்ல என்பதை நாம் உணர்ந்து கொள்ள உதவுகிறது. இப்படிப்பட்ட துவக்கமும் முடியும் இல்லாத நித்திய மான கடவுள் நமது வாழ்க்கையின் தலைவராக இருப்பது நமக்கு கிடைத்த பேறு.**

2. அநித்தியமான மனித வாழ்வு: (வச 5-10)

**மனிதனுடைய வாழ்வு எவ்வளவு நிலையற்றது என்பதை மிகவும் அழகாக மோசே இங்கு விளக்குகிறார். "நீர் எங்களைப் பெருக்கித் தள்ளுகிறீர். எங்கள் வாழ்க்கை ஒரு கனவைப் போன்றது, காலையில் நாங்கள் மறைந்து போகிறோம். நாங்கள் புல்லைப் போன்றவர்கள். காலையில் புல் வளரும், மாலையில் அது காய்ந்து, வாடிப்போகும்" (வச-5,6 ERV). மனிதனுடைய ஆயுசு நாட்கள் கால வரையறைக் குட்பட்டது என்பதை 10ம் வசனத்தில் நாம் காண்கிறோம் "எங்கள் வாழ்நாட்கள் 70வருடங்களே; நாங்கள் பெலனுள்ளவர்களாய் இருந்தால், அது 80வருடங்களாகவும் இருக்கலாம், ஆனாலும் அவை கஷ்டமும் துன்பமும் நிறைந்தவையாகவே இருக் கின்றன; அவை விரைவாய்க் கடந்து போகிறது, நாங்களும் பறந்துபோகிறோம்" (TCV). இன்றும் மனிதனின் சராசரி வயது 75 என்பதை ஆய்வுகள் தெரிவிக்கின்றன. ஆகவே இந்த உலகத்தில் நாம் வாழும் நாட்கள் குறைந்தவையே பல நேரங்களில்**

நமது வாழ்நாட்களை நாம் சரியாக பயன்படுத்தாமல் கடவுளுடைய பிரமாணங்களுக்கு விரோதமாக வாழ்ந்து அவரது கோபத்துக்கு ஆளாகிவிடுகிறோம் (வச-9). கடவுள் நம்முடைய பாவங்களை நமக்கு உணர்த்தும்பொழுது (வச-8) மனத்தாழ்மையோடு அவரது மன்னிப்பை பெறுவதற்கு அவரிடத்தில் நாம் ஒப்புரவாக வேண்டும். இயேசு கிறிஸ்துவின் சிலுவை மரணத்தினால் இந்த சிலாக்கியம் நமக்கு கிடைத்திருக்கிறது (1யோவா-1:7, எபி. 9:14). ஆகவே இந்த மானுடவாழ்வை சரியான விதத்தில் பயன்படுத்தி இறைவனோடு நமது உறவை புதுப்பித்துக் கொள்ள வேண்டும்

3. இறை வேண்டல்: (வச 11-17)

எங்கள் நாட்களை சரியாகக் கணக்கிட எங்களுக்குப் போதியும், அதினால் நாங்கள் ஞானமுள்ள இருதயத்தைப் பெற்றுக்கொள்வோம் (வச-12 TCV). எதிர்காலத்தில் என்ன நடக்கும் என்ற அறிவில்லாமல் இமைக்காக மாத்திரமே வாழ்ந்து மடித்து விடக் கூடாது என்பதை உணர்த்தும் வண்ணமாக மோசே, எங்கள் வாழ்நாட்களை கணக்கிட எங்களுக்கு கற்றுத் தாரும் என்று இறை வேண்டல் செய்கிறார். "இம்மைக்காக மாத்திரம் நாம் கிறிஸ்து மேல் நம்பிக்கை உள்ளவர்களாயிருந்தால், எல்லா மனுஷரைப்பார்க்கிலும் பரிதபிக்கப்படத்தக்கவர்களாயிருப்போம்" (1கொரி.15:19) என்ற பவுல் அடிகளாரின் வார்த்தையை நாம் ஒப்பிட்டு பார்க்க வேண்டும். நம்மில் பலர் இந்த உலகத்தின் தேவைகளை குறித்து அதிகமாக யோசித்துக் கொண்டிருக்கிறோம் (லூக் 16:19-31). இந்த உலகில் நாம் ஒரு வளமான வாழ்வு வாழ வேண்டும் என்பதில் எந்த மாற்று கருத்தும் இல்லை (3யோவா 1:2) ஆனால் பூவுலகில் எல்லா நன்மைகளையும் பெற்று அனுபவித்தும், பரலோக பாக்கியம் கிடைக்காவிட்டால் நமது எல்லா முயற்சிகளும் வீண் என்பதை நாம் அறிய வேண்டும். இவ்வுலக வாழ்வில் நாம் அனுபவிக்கும் எல்லா இன்பங்களும் தற்காலிகமானவைதான். இயேசுவின் இரத்தத்தினால் கழுவப்பட்டவர்களாய் இவ்வுலக வாழ்வைக் கடந்து நித்திய வாழ்வில் பங்கடைவதே நமக்குக் கிடைக்கும் பெரிய பாக்கியம் ஆகும்.

முடிவுரை:

உலகில் நாம் படும் அனைத்து துயரங்களுக்கும் வேதனைகளுக்கும் பதிலாக கடவுள் நம்மை மகிழ்ச்சியாக்குவார் என்பதில் எந்த ஐயமும் இருக்க வேண்டிய அவசியம் இல்லை. "...நாம் அனுபவிக்கிறதற்குச் சகலவித நன்மைகளையும் நமக்கு சம்பூரணமாய்க் கொடுக்கிற ஜீவனுள்ள தேவன்" (1தீமோ 6:17) என்று கடவுளை குறித்து வேதம் கூறுகிறது. அவர் நம்மையும் நமது பிள்ளைகளையும் ஆசீர்வதிக்க வல்லவர் (வச 16), இறைவனின் பிரியம் நம் மீது கட்டாயமாக இருக்கிறது (வச-17), ஆனால், அவரை நம்பி நித்தியத்திற்கு நம்மை ஆயத்தப்படுத்திக்கொள்ள ஆண்டவர் நமக்கு அழைப்பு கொடுக்கிறார். மோசேயின் இந்த இறைவேண்டல் நமது இறை வேண்டலாய் இருக்கட்டும். கடவுள்தாமே தமது அளவற்ற கிருபையால் உங்களை நிறைத்து ஆசீர்வதிப்பாராக. ஆமென். சங்கீதங்கள் கற்றுத்தரும்விலையேறப்பெற்ற சத்தியங்கள். தொடரும்......

ஆசிரியர்: அருட்திரு. அறிவர். டி. சுரேஷ் ராஜன்,

இணை நிறுவனர், வேதாகம மொழிபெயர்ப்பு முயற்சிகள், கோயம்புத்தூர். தென்னிந்தியா.

நற்செய்தி வேதாகம அச்சுப்பதிவு ஊழியங்கள்

**Good Tidings Bible-Prints Ministries**

# நல்ல விதைகள் சுவிசேஷ கைப்பிரதிகள்

GOOD SEEDS GOSPEL TRACTS

சுவிசேஷ ஊழிய பயன்பாட்டுக்காக நற்செய்தி கைப்பிரதிகளை வெளியிட்டு அவற்றை கிறிஸ்துவை அறியாத மக்களுக்கு விநியோகம் செய்துவருகிறோம். மட்டுமல்ல நற்செய்தி பணி செய்வோருக்கு கைபிரதிகளை இலவசமாய் வழங்கி வருகிறோம். ஒரு-வகை கைப்பிரதி வெளியிட ஆகும் செலவு ரூ.3500/- மட்டும். கைப்பிரதிகளை SPONSOR செய்து அனைத்து மக்களும் இயேசுவை அறிந்திட உதவுங்கள். SONSOR செய்ய விரும்பும் அன்பர்கள் நமது ஊழிய இயக்குநரை தொடர்புகொள்ளுங்கள். கைப்பிரதிகளை SPONSOR செய்த தேவபிள்ளைகளுக்கு எங்கள் நன்றி. எமது கைப்பிரதிகளை இலவசமாகப் பெற்று உங்கள் ஊழியங்களில் பயன்படுத்த அன்புடன் அழைக்கிறோம். ஆமேன்.

---

**அருட்திரு. எஸ்.ஜே.டி. தர்மராஜா, ஊழிய இயக்குநர்**

நற்செய்தி வேதாகம அச்சுப்பதிவு ஊழியங்கள், சென்னை-93. தென்னிந்தியா.

==========================================================================================

# ‘அனைவரும் ஊழியத்தில்’

**ஒவ்வொருவரும் 30-கைப்பிரதிகளை விநியோகிக்கும் திட்டம்**

இத்திட்டத்தின் செயல்முறை பின்வருமாறு

1. இத்திட்டத்தில் பங்குபெற, உங்கள் தபால் முகவரியை கடிதம் அல்லது வாடஸ்-அப்-மூலம் எமக்கு அனுப்பவேண்டும். (எமது முகவரி - வாட்ஸ்-ஆப் எண் பக்கம்-18ல்).

2. முகவரி கிடைத்தவுடன் தங்களுக்கு 30-கைப்பிரதிகளை அனுப்பிவைப்போம். நீங்கள் வீட்டிலிருந்தவாறே உங்கள் அண்டைவீட்டார், காய்கறி விற்போர், பால் போடுவோர், எலக்ட்ரீஷியன், பிளம்பர், கார்பென்டர், டிரைவர், குப்பை-வண்டிக்காரர், வீட்டு-வேலைசெய்வோர், சமையல் எரிவாயு வெண்டர், தபால்க்காரர்கள், மெக்கானிக்குகள் ஆகியோரில் இயேசுவை அறியாதவர்களுக்கு ஜெபத்துடன் கைப்பிரதிகளை வழங்க வேண்டும். கைப்பிரதிகளை வெளியூரில் வாழும் இயேசுவை அறியாத உங்கள் உறவினர் மற்றும் நண்பர்களுக்கு தபால்-உறையில் அனுப்பி வைக்கலாம்.

3. கைப்பிரதிகள் தீர்ந்தவுடன் விருப்பம் தெரிவித்தால் மீண்டும் 30-கைப்பிரதிகளை உங்களுக்கு அனுப்பிவைப்போம். இத்திட்டத்தில் இணைந்து நற்செய்தி பரவ உதவுங்கள்.

கிறிஸ்தவ விசுவாசிகளுக்கு இக்கைப்பிரதிகளை வழங்குவதைத் தவிர்க்கவும்.

---

அருட்திரு. தர்மராஜா, ஊழிய இயக்குநர், இரட்சிப்பு ஊழியங்கள், சென்னை-93, தென்னிந்தியா

# வேதாகம போட்டி-168 சரியான பதிலளித்தோர்

1. அமலியா லோகநாதன் (திலை)
2. அமிர்தகனி பொன்ராஜ் (சென்)
3. ஏஞ்சல் சி. (திலி)
4. ஏஞ்சல் டார்வின் (கன்)
5. ஏஞ்சல் ராஜதுரை (சென்)
6. ஏஞ்சலின் ரூஸ்வெல்ட் (சென்)
7. ஏஞ்சலின் வில்லியம்ஸ் (சென்)
8. அன்னாள் ஜெபக்கனி (கோய)
9. அனி பாய் ஜான் (திலி)
10. அனிதா ஜான் (கோய)
11. அனிதா மோகன்ராஜ் (ஈரோ)
12. அரோமா சாத்ராக் (திலி)
13. ஆர்தர் மாசில்லாமணி (சென்)
14. அருள்செல்வி (விரு)
15. அருள்செல்வி ஜாண்ஸன் (திலி)
16. அசோக் குமார் பிரின்ஸ் (தூத்)
17. பெல்சி தங்கராஜ் (சென்)
18. பெனிட்டா பிராங்க்ளின் (சென்)
19. பெட்ஃடி பிரின்ஸ் (சென்)
20. பியூலா ஜேசுராஜன் (பாண்)
21. பியூலா ராஜசெல்வன் (கோய)
22. செலினாபென்சி வில்சன் Dr.(குவை)
23. செலினா வின்செண்ட் (திலி)
24. சந்திராபாய் மாசிலாமணி (சென்)
25. சந்திரலேகா (ஆபி)
26. சந்திரா மேரி விஜயன் (பெங்)
27. சந்திரா சாமுவேல் (திலி)
28. சார்லட் டேவிட் (சென்)
29. சித்ரா பெஞ்சமின் (திளு)
30. சிட்டி (திளு)
31. கிறிஸ்டல் ஜாய் யோபு (திதூ)
32. கிறிஸ்துதாஸ்; (ஈரோ)
33. கிறிஸ்டி ஆயீட்டஸ் (திலி)
34. கிறிஸ்டி ஞானராஜ் (சென்)
35. கிறிஸ்டி மெர்சி ராஜ்குமார்(தூத்)
36. கிறிஸ்டி பொன்னுசாமி (மது)
37. சிசிலி புஷ்பம் டேவிட் (சென்)
38. டெய்ஸி பில்பா (மும்)
39. டெய்ஸி ஜெபதாஸ் (திசி)
40. டெய்ஸி சாம் (ஆபி)
41. டேனியல் தாமஸ் (திலி)
42. டேனிங் சொர்ணா ஜெஸ் (திலி)
43. டேவிட் ஜே.ஆர். (சென்/கோய)
44. தெபோராள் டி. (சென்)
45. தேவமணி ஆபிரகாம் (தூத்)
46. தேவநேசம் ராஜாசிங் (சென்)
47. டோராபாய் (சென்)
48. எபநேசர் கிரேஸ்லின் சாந்தி (திலி)
49. எலிசபெத் செல்லத்துரை (சென்)
50. எமிமாள் மில்டன் (சென்)
51. எமிமாள் சாமுவேல் ஜெஸிக்கா (மது)
52. எஸ்தர். டி.ஆர். (திலி)
53. எவாஞ்சலின் ஜோன்ஸ் Dr. (சேல)
54. குளோரி ரவீந்திரன் (திலி)
55. ஞானஜோதி பேரின்பம் (விரு)
56. ஞானம் ஜெபராஜ் (திலி)
57. ஞானம் பிலிப் (கோய)
58. ஞானசெல்வி மோசஸ் (அமெ)
59. ஞானசுந்தரி நாகராஜன் (திலி)
60. கோல்டா ஜேசுபாதம் (மும்)
61. கிரேஸ் டேனி (தென்)
62. கிரேஸ் பொன்மணி ரெக்ஸ் (சென்)
63. கிரேஸ் பிரின்ஸ் (தென்)
64. கிரேஸி கிறிஸ்டோபர் (சென்)
65. கிரேனா அன்புரோஸ் (சென்)
66. கிரேஸியா ஜெயபால் (சென்)
67. கிரிசெல்டா செய்லர் (சென்)
68. குணவதி ஜெபமணி (சென்)
69. ஹெலென் ஜான்சிராணி (திலி)
70. ஹெலென்ஜெனிபர் பாண்டியன்(சென்)
71. ஹெலன் திலக் (தூத்)
72. ஹேமா அஜீத் (சென்)
73. ஹேமா கேப்ரியேல் (பெங்)
74. ஹெப்சி அசரியா (பாண்)

75. ஹெப்சிபா மங்களராஜ் (திலி)
76. ஹிம்லா ராஜகுமாரி (சென்)
77. இளவரசி ஜோபிதா (கோய)
78. இன்பவல்லி கலைச்செல்வன் (மது)
79. இந்திரா கெத்ஸி டேவிட் Dr. (திலி)
80. ஜமீலா செல்வராஜ் (சென்)
81. ஜானகி (திலி)
82. ஜேன் தர்மராஜ் (திலி)
83. ஜேன்ஸ் (ஜான்ஸி) (கோய)
84. ஜான்ஸி சந்தியா (திலி)
85. ஜான்ஸி ரோஸ்மேரி (திலி)
86. ஜாஸ்மின் ஞானதாஸ் (சென்)
87. ஜெபா கோல்டா (திலி)
88. ஜெபா ஜெயராஜ் (சென்)
89. ஜெபக்குட்டி மோசஸ் (திலி)
90. ஜெபரஞ்சிதம் மெர்லின் (தூத்)
91. ஜெபசீலி கிளின்டன் (சென்)
92. ஜெபா சீனி (திலி)
93. ஜெமி ஜாய் பிளஸ்ஸி (திலி)
94. ஜீவா டேவிட் சாலோமோன் (தென்)
95. ஜெமீலா நிக்ஸன் (சென்)
96. ஜெனிலா (சென்)
97. ஜென்ஸி ஞானேஷ் (மும்)
98. ஜெனித்தா செல்வின் (திலி)
99. ஜெனிட்டா ஷெரூபா ஞானவேல் (தர்)
100.ஜெரின் ஸ்டீபன் (மும்)
101.ஜெஸி ஜெயக்குமார் (திலி)
102.ஜெஸிதா அகஸ்டின் (ஆபி)
103.ஜெயா ஆல்பர்ட் (தஞ்)
104.ஜெயசெல்வி முத்துராமன் (திலி)
105.ஜீஜிபாய் எட்வர்ட் (சென்)
106.ஜோஸ்பின் ஜெஸி (சென்)
107.ஜாய்ஸ் பாண்டியன் (சென்)
108.ஜூலியட் ஜெபா (சென்)
109.ஜூலியட் ஜெயக்குமார் (திலி)
110.கலையரசி செல்வராஜ் (சென்)
111.கஸ்தூரி எலியாஸ் (திலி)
112.கிருபாவதி எஸ். (சென்)
113.கோயில்பிள்ளை ஞானத்தாய்(தென்)
114.லீலா டேவிட் (சென்)
115.லீலா ஜோஸப் (கோய)
116.லில்லி ஜாண்ஸன் (சென்)
117.லிஸி டென்சிங் (திலி)
118.மல்லிகா ஜாய்ஸ்(ஜஸ்டினா)(ஜெய)
119.மல்லிகா வி. (சென்)
120.மரிய பாப்பா (சென்)
121.மரியாள் ஜே.எஸ். (தூத்)
122.மெஜிலா ஜோஷ்வா (தூத்)
123.மேபல் கிறிஸ்டியான் (சென்)
124.மெர்சி ஃபுளோரா பாஸ்கரன் (வேலூ)
125.மெரிட்டா ஜெயபாலன் (திசி)
126.நகோமி (திசி)
127.நகோமி நிர்மலா (சென்)
128.நதியா லாரன்ஸ் (திரு)
129.நேச மாலா பீட்டர் (திலி)
130.நிக்ஸன் எவர்பிரைட் (திலி)
131.ஆலிவ் ஜெயபாலன் (கோய)
132.ஓலிவியா லேங்டன் (திசி)
133.பாக்யபாய் ஆரோன் (திலி)
134.பமீலா எட்வின் (கன்)
135.பத்மாவதி ஜஸ்டின் (அமெ)
136.பெர்சி பால் பொன்சிங் (தூத்)
137.பிங்க்லின் சந்தோஷ் (சென்)
138.பொன்மணி உத்தமசிங் (தூத்)
139.பிரேமா ஜானி (தென்)
140.பிரேமா ஸ்டாலின் (சென்)
141.பிரேம்குமாரி ஜெய்சிங் (சென்)
142.பிரின்ஸ் தயாநிதி (சென்)
143.பிரின்ஸ்சில்லா டேனியல் (சென்)
144.பிரின்ஸ்லின் ஷைனி (தென்)
145.பிரிசில்லா தாஸ் (சென்)
146.பிரிஸ்கில்லாள் சசி (கோய)
147.பிரியா ராஜ்குமார் (சென்)
148.ராஜபிரமீளா (திதூ)
149.ராஜ்மேரி சார்லஸ் (கேர)
150.ரமோலா அதிசயராஜ் (திலி)
151.ராணி ஃபுளோரா (தென்)
152.ராணி பிரபாகர் (திலி)

153.ராணி சாமுவேல்ராஜ் (சென்)
154.ரத்னாவதி பாண்டியன் (சென்)
155.ரோஸ்லின் மார்கிரெட் (சென்)
156.ரோஸி ஸ்டீபன் (சென்)
157.ரூபவதி நோபிள் (திலி)
158.ரூத் (ஹேப்) (திசி)
159.ரூத் ஜாண்ஸன் (திலி)
160.சலோமி மனோகர் னச. (சென்)
161.சங்கீதா ஜெனிஸ் (திலி)
162.சாரா பாலசிங் (மது)
163.சற்குணம் (திது)
164.சரோஜா செல்வராஜ் (சென்)
165.சரோஜினி எலிசபெத் (சென்)
166.செல்வ அமுதா ஜார்ஜ் (சென்)
167.செல்வ பென்சி ஆபேல் (ராணி)
168.செல்வராஜ் ம. (கோய)
169.செல்வராணி ஆல்பர்ட் (சென்)
170.செல்வி எஸ். (சென்)
171.செல்வி அமிர்தராஜ் (திளு)
172.ஷாலி எடிசன் (சென்)
173.சாந்தி ஆல்பர்ட் (தென்)
174.சாந்தி ஜெயசீலன் (சென்)
175.சாந்தி ரோஸ் (கோய)
176.ஷர்மிளா செல்வராஜ் Dr. (கட)
177.ஷீபா சாம்ஸன் (சென்)
178.ஷீலா இஸ்ரேல் (திசி)
179.ஷெரீன் ஜெபராஜ் (திளு)
180.சில்வியா ஃபின்னி Dr. (சென்)
181.சவுந்;தரம் சாலமோன் (சென்)
182.ஸ்டெல்;லா டேவிட் (தூத்)
183.ஸ்டெல்;லா கனகராஜ் (சென்)
184.ஸ்டெல்;லா சூசைய்யா (தூத்)
185.சுகிர்தா ஆல்வின் (சென்)
186.சுஜாதா சாமுவேல் (சென்)
187.சுமித்ரா (சென்)
188.சுந்தரி அன்பழகன் (தென்)
189.சுசீலா தியோடர் (திசி)
190.சுவர்ணலதா அற்புதராஜ் (சென்)
191.தெல்;மா ஸ்டேன்லி (மது)
192.உமா குளோரி (சென்)
193.வனஜா ஹெர்பர்ட் (திலி)
194.வசந்தா அன்பன் (திலி)
195.வசந்தா சந்திரசேகர் (கோய)
196.வசந்தா துரைராஜ் (ஓஎப்டி)(திசி)
197.வசந்தி கருணாகரன் (சென்)
198.வசந்தி வாசன் (சென்)
199.விஜயராணி ஏ. (சென்)
200.விஜி டேனியல் (செங்)
201.விமலா ஜெயக்குமார் (தூத்)
202.விண்ணரசி ரோஸ் (சென்)
203.வினோலியா பால (மது)
204.வினோலியா ஜேம்ஸ் (தூத்)
205.வினோலியா வில்சன் (திது)
206.வைலட் கிறிஸ்டோபர் (திலி)

================================================================================

## வேதாகம போட்டி-168 சரியான விடைகள்

(வெளிப்படுத்தின விசேஷம்)

1. உடன்படிக்கையின் பெட்டி வெளி:-11:19
2. பரிசுத்த நகரம் வெளி:-21:2
3. ஜெயம் கொண்டவர்கள் வெளி:-15:23
4. வலுசர்ப்பம் வெளி:-12:9
5. ஜீவ-விருட்ச இலைகள் வெளி:-22:2
6. யேசபெல் வெளி:-2:20
7. பிதாவின் நாமம் வெளி:-14:1
8. ஆட்டுக்குட்டியானவர் வெளி:-4:2,3
9. தவறு - வெளி:-13:10
10. தவறு - வெளி:-15:5
11. தவறு - வெளி:-16:17
12. சரி - வெளி:-13:9
13. அ - ஜீவதண்ணீர் வெளி:-22:17
14. ஈ - ஆமென் என்பவர் வெளி:-3:14
15. ஆ - ஆட்டுக்குட்டியானவர் வெளி:-5:7
16. ஈ - எட்டி நட்சத்திரம் வெளி:-8:10,11
17. ஒரு தூதன் வெளி:-8:13
18. கண்ணாடிக் கடல் வெளி:-15:2,3
19. திறக்கப்பட்ட-சிறுபுத்தகம்; வெளி:-10:8-10
20. அறுநூற்றறுபத்தாறு வெளி:-13:17-18

# வேதாகம போட்டி-169

போட்டி:168 வேத-பகுதி: ஆதியாகமம்

படைப்பாசிரியர்: அருட்திரு.எஸ்ஜேடி. தர்மராஜா

வேதவசன இருப்பிடத்துடன் பதிலளிக்கவேண்டும். கடைசி நாள்: 25-11-2024

1. லகாய்ரோயீ என்னும் துரவுக்குச் சமீபமாய் குடியிருந்தவர் யார்?
2. அறுப்பு நாட்களிலே வயல்வெளியில், தூதாயீம் கனிகளைக் கண்டெடுத்தது யார்?
3. ரெபெக்காளுடைய தாதியின் பெயர் என்ன?
4. ஆபிராமின் சகோதரனின் மகனான இவர் சோதோமிலே குடியிருந்தார் - இவர் யார்?
5. கர்த்தர் சோதோம்-கொமோரா மீது வானத்திலிருந்து எதை வருஷிக்கப்பண்ணினார்?
6. எகிப்தில், யோசேப்பை, இஸ்மவேலரிடத்தில் விலைக்கு வாங்கிவரின் பெயர் என்ன?
7. யோசேப்பின் தகப்பனுக்காக 70-நாள் துக்கங்கொண்டாடியவர்கள் யார்?
8. ஆதாள் - சில்லாள், யார் இவர்கள்?
9. 'ஈசாக்குக்கு ஏதோம் என்றும் பேர்' - சரியா தவறா?
10. 'லேயாளுடைய கண்கள் கூச்சப்பார்வையாயிருந்தது' - சரியா தவறா?
11. 'யாக்கோபு குணசாலியும் கூடாரவாசியுமாய் இருந்தான்' - சரியா தவறா?
12. 'ஈசாக்கு இறந்தபோது ஆபிரகாம் நூறுவயதாயிருந்தான்.' - சரியா தவறா?
13. பார்வோன் '**இவரை**' நோக்கி: 'உமக்கு வயது என்ன?' என்று கேட்டான்:
அ) யோசேப்பை ஆ) மோசேயை இ) ஆரோனை ஈ) யாக்கோபை

14. மூடப்பட்ட '**இவைகளுக்கு**' மேல் 15-முழ உயரத்திற்கு ஜலம் பெருகிற்று:
அ) வயல்களுக்கு ஆ) வீடுகளுக்கு இ) மலைகளுக்கு ஈ) பாறைகளுக்கு

15. சமாதான கர்த்தர் வருமளவும் '**இது**' யூதாவைவிட்டு நீங்குவதில்லை:
அ) ராஜ்ஜியம் ஆ) செங்கோல் இ) கிருபை ஈ) கர்த்தரின்-கரம்

16. எகிப்துக்குப்போன யாக்கோபின் குடும்பத்தார் '**இத்தனை**' பேர்:
அ) 70பேர் ஆ) 72பேர்; இ) 10பேர் (ஈ) 12பேர்

17. மம்ரேயின் சம-பூமி! மக்பேலா குகை-பூமி! மரம்-அடர்ந்த மலை-பூமி! நாநூறு வெள்ளி விலை-பூமி! ஆபிரகாமுக்கு அது என்ன பூமி?

18. இளைஞன் உடுத்திய அங்கி! இரத்தத்தில் ஊறிய அங்கி! பரிசாகக் கிடைத்த அங்கி! பகையாய மாறிய அங்கி! இது என்ன அங்கி?

19. முகத்தை மூடிய மரு-மகள்! மாமனார் பார்வையில் விலை-மகள்!
கைம்பெண்ணாய் வாழ்ந்த குண-மகள்! நீதியில் நிறைந்த திரு-மகள்! இவள் யார்?

20. கட்டழகு கட்டழகுக் கன்னி! குடம் குடமாய் தண்ணீர் வார்த்த கன்னி! துரவில் இறங்கிய இவள் துறவி அல்ல! பரபரப்பாய் பணி செய்த இவள் பணிப்பெண் அல்ல! யார் இவள்?

**பதில் அனுப்பவேண்டிய முகவரி: திருமதி.ஜெயசீலி தர்மராஜா, எஃப்-1, முதல் மாடி, பாரதி பிளாட்ஸ், எண்: 4/2-A பாரதி தெரு, காந்தி நகர், சாலிகிராமம், சென்னை-93. வாட்ஸ்-அப்: 9789914463**

## கர்த்தருடைய நாமங்களின் மகத்துவங்கள்

பாகம்-66 எப்பிசோடு-66

# இராஜரீகம் பண்ணுகிற தேவன்

THE LORD THAT REIGNETH YAH'WEH HASHEM HAMELEK

## 'யாவே ஹாஷெம் ஹாமெலெக்'

THE LORD REIGNETH; HIS THRONE IS ESTABLISHED OF OLD THAT ART FROM EVERLASTING. PSALM 93:1,2

கர்த்தர் ராஜரிகம்பண்ணுகிறார், அவர் சிங்காசனம் பூர்வமுதல் உறுதியானது; அவர் என்றைக்கும் அநாதியாயிருக்கிறார். சங் 93:1,2

வானத்தின் கீழெங்குமுள்ள இராஜ்யங்களின் ராஜரீகமும், ஆளுகையும் உடைய வரின் நாமத்தில் இரட்சிப்பின் விசுவாசிகளுக்கு நவம்பர் மாத மகத்துவத்தின் வாழ்த்துக்கள்.

**சங்-103:19** கர்த்தரின் ராஜரீகம் சர்வத்தையும் ஆளுகிறது.

**சங்-96:10** ஆதலால் பூச்சக்கரம் (திருச்சபை) அசையாதபடி உறுதிப்பட்டிருக்கும்.

**சங்-97:1** கர்த்தர் ராஜரீகம் பண்ணுகிறார். இந்தியா சுவிசேஷத்தினால் பூரிப்பாகும். இந்தியாவைச் சூழ்ந்துள்ள தீவுகள் இரட்சிப்பினால் மகிழும்.

**மீகா-4:8** ராஜரீகம் தேவ பிள்ளைகளிடத்தில் வரும்.

**சங்-99:1** தேவ பிள்ளைகளுக்கு எதிராக எழும்புகிற துன்மார்க்கன் தத்தளிப்பான்.

**ஏசா-52:7** சமாதானத்தைக் கூறி, நற்காரியங்களைச் சுவிசேஷமாய் அறிவித்து, இரட்சிப்பைப் பிரசித்தப்படுத்தி: உன் தேவன் ராஜரிகம் பண்ணுகிறாரென்று சீயோனுக்குச் சொல்லுகிற சுவிசேஷகனுடைய பாதங்கள் மலைகளின்மேல் எவ்வளவு அழகாயிருக்கின்றன. என்ற தேவ வார்த்தையின்படி தேவபிள்ளைகளின் சரீரத்தில் ஆசீர்வாதம், குடும்பத்தில் சமாதானம், ஊழியத்தில் தேவ மகத்துவம் நிரம்பி வழியும்படி ஆசீர்வதிக்கிறார்.

**ஜெபம்:** தலைமுறை தலைமுறையாய் ராஜரீகம் பண்ணுகிறவரே உம்மைத் துதிக்கிறோம். எங்களை அந்தகாரத்தினின்று ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்த உமது புண்ணியங் களை அறிவிக்கும் ராஜரீக ஆசாரியக்கூட்டமாய் அபிஷேகித்த உம் நோக்கம் நிறைவேற அர்ப்பணிக்கிறோம். அர்ப்பணித்த எங்களை எல்லோர் கண்காண ஆவிக்குறிய வாழ்வில் பெரிய வர்கள் ஆக்கி ராஜரீக மகத்துவத்தை எங்களுக்குக் கட்டளையிட்டவரே! உமக்கு ஸ்தோத்திரம். இயேசுவின் நாமத்தில் இதைச் சுதந்தரித்துக்கொள்கிறோம் பிதாவே. ஆமென்.

கிறிஸ்துவுக்குள்
உங்கள் அன்பு சகோதரி
C. ANGEL

தொகுப்பு: சகோ. சி. ஏஞ்சல் B.SC திருநெல்வேலி, தென்னிந்தியா

(கதை-162)

# நன்மை செய்யப் படியுங்கள்

சகோ. எம். அசரியா ஞானதாஸ் எம்.ஏ; எம்.எட்

ஒரு சிறு கிராமத்தில் ஒரு கால்நடை மருத்துவர் வசித்து வந்தார். அக்கிராமத்தை சுற்றிலும் இருந்த பல கிராமங்களில் உள்ள ஏராளமான ஆடு, மாடு, நாய், பூனை போன்ற வளர்ப்பு பிராணிகளுக்கு அந்த டாக்டர் கிறிஸ்தவ பண்புகளாகிய பொறுமை அன்புடன் சிகிச்சை அளித்துவந்தார். இதனால் ஏராளமான ஆடு மாடுகள் நோயிலிருந்து சுகம் பெற்றதோடு அநேக கால்நடைகளுக்கு தடுப்பு ஊசிகள் போட்டதனால் ஏராளமான ஆடு மாடுகள் உயிர்க்கொல்லி நோயிலிருந்து காப்பற்றப்பட்டன. அவரது சேவைக்காக மக்கள் அவரை பாராட்டினர். அவரும் பெருமையில்லாதவராய், பொறுமையுள்ளவராய் இயேசுவுக்கு சாட்சியாக செயல்பட்டு வந்தார்.

இந்த சூழ்நிலையில் ஒரு நாள் ஒரு நாய் அந்த டாக்டரிடம் வந்தது. காலில் கண்ணாடி குத்தியதால் வேதனையுடன் இரத்தம் சொட்ட சொட்ட நொண்டி நொண்டி வந்தது. டாக்டரும் அந்த நாய்க்கு சிறப்பாக சிகிச்சை அளித்தார். சிகிச்சை பெற்ற நாய் தனது வாலை ஆட்டி நன்றிகூறி விடைபெற்றது. சில நாட்க்கள் கழித்து அதே நாய் அங்கு வந்தது; ஆனால், அது தன்னைப்போல் காயப்பட்ட வேறோரு நாயை கூட்டிக்கொண்டு வந்தது. அந்த நாயின் காலில் இரத்தம் கொட்டிக்கொண்டிருந்தது. பாதிக்கப்பட்ட அந்த நாய்க்கும் மருத்துவர் சிகிச்சை அளித்து அனுப்பிவிட்டார். இரு நாய்களும் தங்கள் வால்களை ஆட்டி டாக்டருக்கு நன்றி தெரிவித்து விடைபெற்றன. அந்த மருத்துவரும் தன்னைப்போல் மற்றவர்களும் சுகமாக வாழவேண்டும் என்ற நாயின் எண்ணத்தையும் அறிவுக்கூர்மையையும் எண்ணி வியப்படைந்தார்.

பிரியமானவர்களே! நாமும் நம் ஆண்டவராகிய தேவனிடமிருந்து பெற்றுக்கொண்ட நன்மை களுக்காக நன்றியுள்ளவர்களாக வாழ்வதோடு நம்மைச்சுற்றி வாழ்பவர்களும் துன்பங்களின்றி மகிழ்ச்சியோடு வாழவேண்டும் என்ற நல்லெண்ணம் உடையவர்களாக வாழவேண்டும். தான் பெற்ற நன்மைகளை இன்னொரு நாயும் பெற ஊதவி செய்த அந்த நாய் நமக்கு ஒரு முன் உதாரணம் ஆகும். நம்மைச் சுற்றி வாழும் மக்களும் துன்பங்களிலிருந்து விடுபட்டு மகிழ்ச்சியோடு வாழ அவர்களுக்கு உதவிசெய்ய வேண்டும் என இயேசு சுவாமி விரும்புகிறார். மற்றவர்கள் துன்பங்களில் பங்குகொண்டு அவர்களுக்கு நன்மைசெய்து அவர்களும் நம்மைப் போல் வாழ உதவி செய்வதை இயேசு நம்மிடம் எதிர்பார்க்கிறார். இயேசு சுவாமியின் விருப்பத்தின்படி செயலாற்றுவோம் ஆண்டவர் தரும் ஆசீர்வாதங்களை பெற்று நிறைவாழ்வு வாழ்வோம்.

வேதம் இவ்வாறு கூறுகிறது...

கர்த்தரை நம்பி நன்மை செய். சங் 37:3

நன்மை செய்யும்படி உனக்குத் திராணி இருக்கும்போது அதை செய்யத்தக்கவர்களுக்குச் செய்யாமல் இராதே. நீதி 3:27

நீ நன்மை செய்தால் உனக்கு மேன்மையில்லையோ. நீ நன்மை செய்யாதிருந்தால் பாவம் உன் வாசற்படியில் படுத்திருக்கும்.ஆதி 4:7

M.AZARIAH GNANADOSS M.A; M.ED

EDITOR, RATCHIPPU TAMIL CHRISTIAN MONTHLY, SALIGRAMAM, CHENNAI-93. MOBILE:9962924900

# இரண்டாயிரம் ஆண்டு வரலாறு 2ம் வருகைக்குத் தயாராகு

கட்டுரை ஆசிரியர்: அறிவர்.திருமதி.சலோமி மனோகர்

தொகுதி-6 பகுதி-3 எப்பிசோடு-28

6. அக்பர் மற்றும் ஜேசுவைட்ஸ்
3. இரண்டாம் மற்றும் மூன்றாம் மிஷன் பணிகள்

**இரண்டாம் மிஷன் பணி: போதகர் அக்வாவிவா**

தன் சொந்த நாடு திரும்பிய பின், 7-வருடங்கள் அக்பருக்கும் போர்த்துகீசிய ருக்கும்; இடையே சிறிய உறவே இருந்தது. கிரேக்க துணை-டீக்கன் லியோன் கிரிமோன் கோவா வழியாகச் சென்றபோது அக்பரின் சபையில் தம் உலக அறிவு மிகுந்த உரையாடலால் அவரை மகிழ்வித்தார். போர்த்துகீசியரின் தூதராக லியோன் கிரிமோனின் சேவைகளைப் பயன்படுத்த அக்பர் முடிவு செய்தார். அக்பரின் செயல்பாடுகளைக் கண்ட டீக்கன் லியோன், அவர் கிறிஸ்து வர் ஆவார் என நம்பினார். கோவாவில் உள்ள தந்தையருக்கு, கடிதம் மூலம் லியோன் கிரிமோன் குறித்த நம்பிக்கையை அக்பர் வெளிப்படுத்துகிறார். இப்படியாக, 2வது மிஷன் பணி எதிர்பாரா விதமாக தொடங்கியது.

திருத்தந்தைகள் எட்வர்ட் மற்றும் கிறிஸ்டோபர் ஆகியோர் மே 1591ல் லாகூர் சென்றனர். 7-வருட இடைவெளியை மறந்து அக்பரும் அவர்களுக்கான வரவேற்பு மரியாதை மற்றும் பெருந்தன்மை ஆகியவற்றில் குறை ஏதும் வைக்கவில்லை. அவர்களுக்கு வசதியான வீடு கொடுத்து, தமது பிரபுக்கள், மகன் மற்றும் பேரன் கற்றுக்கொள்ள ஒரு போர்த்துகீசிய மொழி பள்ளியைத் தொடங்கும்படி அவர்களைக் கேட்டுக் கொண்டார். ஆனால், அக்பரின் ஆணைப்படி ஜெசுவைட்டு கள் பள்ளிக்கூடத்தைத் தொடங்கவில்லை. பல சிரமங்கள் தோன்றியதன் விளைவாக, ஒரு வருட முடிவில் அவர்கள் திரும்ப அழைக்கப்பட்டனர். ஆகவே, அவர்கள் செய்ய வந்த பணியை திட்டமிட்ட காலத்திற்கு முன்பே முடித்தனர்.

**மூன்றாம் மிஷன் பணி:** 3-ம் பணி கி.பி.1595ல் புதிய குழுவின் வருகையுடன் லாகூரில் தொடங்கியது. ஜெசுவைட் மிஷனரிகள் மொகலாய அரசவைக்கு வருகை தந்த முதல் ஐரோப்பியர் குழுவாகும். அவர்கள் 1542ன் ஆரம்பத்தில் கோவாவின் போர்த்துகீசிய காலனிக்கு வந்தனர். அங்கிருந்த கிறிஸ்தவர்களின் நன்மைக்காகவும், வேறு பல விஷயங்களுக்காகவும், அரசரின் அவையில் தந்தையர் இருக்கவேண்டுமென அக்பரின் சொன்னதின்படி அங்கு 3-ஜெசுவைட் மிஷனரிகள் இருந்தனர். ஜெரோம் சேவியர் கி.பி.1595ல் லாகூர் வந்து கி.பி.1615 வரை அங்கு இருந்தார். ஜெரோம் சேவியர் 20-ஆண்டுகளுக்கும் மேல் அங்கு ஒரு சிறந்த தலைவராக பணியாற்றினார்.

சேவியரின் இயற்பெயர் ஜெரோம் டி. எஸ்பெலெட்டா ஒய். கோனி. அவரது தந்தை பிரான்சிஸ் சேவியரின் மருமகன் ஆவார். ஜெரோம் 1549ல் பிறந்தார். அவர் இயேசு

சபையில் நுழைந்து, கி.பி.1568ம் ஆண்டு மே 7ம் நாள் சேவியரின் புகழ்பெற்ற பெயரை ஏற்றுக்கொண்டார். சேவியர் செப்டம்பர் 1581ல் இந்தியா வந்தார். ஆறு ஆண்டுகள் கொச்சியில் உள்ள கல்லூரியின் ரெக்டராகப் பணியாற்றினார். சேவியரின் வீடு கோவா வில் இருந்தது. கி.பி.1592ல் கொச்சியில் இருந்த கிறிஸ்தவர்கள் அவரை கொச்சிக்கு அழைத்தனர். அங்கு அவர், பரி. தோமா குறித்து அறிந்துகொள்ளும் சந்தர்ப்பம் பெற்றார். கோவாவில் அவர் கழித்த ஆண்டுகள் மகிழ்ச்சியற்றவை. அதற்குக் காரணம், ஸ்பானிய உயர் அதிகாரிகள் மற்றும் போர்த்துகீசிய குடிமக்கள் தந்த பதட்டங்களே.

வன்முறை சர்ச்சை இல்லாமல் முஸ்லிம்களை வெல்வதற்கான சேவியரின் முறை: இதயபூர்வமாக இணைவது. உதாரணமாக, பூட்டிய இதயங்களை திறக்கும் நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் அன்பு-மென்மை-நன்மை எனும் சாவி பயன்படுத்தப்பட வேண்டும். கிறிஸ்தவர்கள், தீங்கிழைக்கும் நோக்கத்தால் அல்லாது சத்தியத்தின் மீதுள்ள அன்பினால் உந்தப்பட்டு பேசவேண்டும். தெய்வீக கிருபையால் மட்டுமே, முஸ்லிம்களை இரட்சிப்பு நம்பிக்கைக்குள் கொண்டு வர முடியும். ஆனால், மனமாற்றம் நடைபெறுவதற்கு முன், அவர்களுடைய பகுத்தறிவு அதற்கு சம்மதம் தெரிவித்திருக்க வேண்டும். இது மிகவும் முக்கியமானது. ஏனென்றால், முஸ்லீம்கள் தங்கள் மதம் ஒரு பகுத்தறிவு மதம் என்று வாதிடுகின்றனர். ஆகவே, நமது நம்பிக்கைக் கட்டுரைகளை பகுத்தறிவு வாதங்கள் மூலம் நிரூபிக்க முடியும் என சேவியர் நம்பினார். சேவியரின் சர்ச்சைக்குரிய படைப்புகளில் மிக முக்கியமானது 'வாழ்க்கையின் நீரூற்று'. இது சிறந்த அறிஞர்களின் உதவியுடன் போர்த்துகீசிய மொழியில் மொழி பெயர்க்கப்பட்;டதும், 540 பக்கங்களைக் கொண்டதுமான ஒரு பாரசீக படைப்பாகும். சேவியர், குரானைப் படிக்கவும் அதை லத்தீனில் மொழி பெயர்க்கவும்; விரும்பினார். மட்டுமல்ல, அக்பருன் நீண்ட நேரம் உரையாடி அவரது கிறிஸ்தவ மனப்பான்மையின் தெளிவான அறிக்கையைப் பெறவும் அவர் விரும்பினார். ஆனால் அக்பர் வழக்கம் போல், தாம் உறுதியளித்தபடி, செவிசாய்க்கவில்லை. அக்பர், தக்காணத்திற்கு புறப்பட தயாரானார். அந்த பயணம் அவரை கோவாவின் அருகில் கொண்டு வரும்;; அங்கு அவரது ஓய்வு நேரத்தில் அவர், தந்தையரின் பேச்சைக் கேட்க முடியும் என சேவியர் நம்பினார். முந்தைய ஆட்சியாளர்களிடம் போல் அல்லாது அக்பர் ஆட்சியில் எளிதாக கிறிஸ்துவின் தெய்வீகத்தை அறிவிக்க கிறிஸ்தவத் தந்தையர் துணிந்து செயல்பட முடிந்தது. அக்பரின் 10-வருட காலத்தில் திருத்தந்தையர்கள் அக்பருடன் நிலையான உறவில் இருந்தனர். அக்பர் கி.பி.1597ல் காஷ்மீர் சென்றபோதும், கி.பி.1603ல் தக்காணம் சென்றபோதும் சேவியர் மற்றும் கோஸ் ஆகியோர் அவருடன் 2-வருடங்களுக்கு மேலாய் தங்கியிருந்தனர். இந்திய கிறிஸ்தவ திருச்சபை வரலாறு தொடரும்.......

**AUTHOR: DR.MRS.SALOMI MANOHAR M.A; M.PHIL; P.HD ASSISTANT PROFESSOR (RTD), (POPE'S COLLEGE, SAWYERPURAM) THIRUVANMIYUR, CHENNAI-41, SOUTH INDIA**

# ஜெப-ஜன்னல் ஜெப நேரங்கள் நவம்பர் 2024

**ஜெப-ஜன்னல்-1 காலை-ஜெபம்**
நாள்: 08-11-2024 இரண்டாம் வெள்ளி
நேரம்: காலை 5-முதல் 6-மணி வரை.

**ஜெப-ஜன்னல்-2 மதிய-ஜெபம்**
நாள்: 15-11-2024 மூன்றாம் வெள்ளி
நேரம்: மதியம் 1-முதல் 2-மணி வரை.

**ஜெப-ஜன்னல்-3 இரவு-ஜெபம்**
நாள்: 22-11-2024 நான்காம் வெள்ளி
நேரம்: இரவு 8-முதல் 10-மணி வரை.

பிரியமானவர்களே! இந்த ஜெப-ஜன்னல் ஜெப-நேரங்களில் தானி-6:10 வசனத்தின்படி "தானியேல், மேலறையில் எருசலேம் தேவாலயத்திற்கு நேராய் பலகணிகள் திறந்தி ருக்க" ஜெபித்ததைப் போல் நமது இயக்குநரும், ஜெப-ஜன்னல் ஜெப-வீரர்களும் ஆலயம் நோக்கி ஜெபிக்கவிருக் கிறார்கள். நீங்களும் இந்த நேரங்களில் உங்கள் ஆலயம் நோக்கி ஜெபிக்கும்படியாக அன்புடன் வேண்டிக்கொள்கிறோம்.

## DETAILS ABOUT US

**CONTACT DETAILS:**

MOBILE: 9962924900/7871676100
WHATSAPP: 9789914463/7871676100
E-MAIL: sjddharmaraja@gmail.com
OUR WEBSITE: www.ratchippu.com
POSTAL ADDRESS: REV. S.J.D. DHARMARAJA,
MISSION DIRECTOR, NO: 4/2-A, BARATHI ST.,
GANDHI NAGAR, SALIGRAMAM, CHENNAI - 93

**BANK DETAILS:**

NAME: DHARMARAJA SJD.
S.B. ACCOUNT NO: 601071548.
BANK & BRANCH: INDIAN BANK, NESAPAKKAM
IFSC CODE: IDIB000N122.
BANK ADDRESS: NESAPAKKAM, CHENNAI-78.

**UPI DETAILS:**

UPI NAME: GOOGL-PAY (G-PAY)
NAME: REV. DHARMARAJA SJD
G-PAY NUMBER: 9789914463



# BETHEL BIBLE COLLEGE

**A Ministry of Gospel Mission of India**

(Affiliated to the Senate of Serampore College [University])

## Admissions Open

## Regular Courses

(Medium: English)

**Bachelor of Divinity - 5 years**
Eligibility: Intermediate Pass

**Bachelor of Divinity - 4 years**
Eligibility: Any Recognized Degree

**Bachelor of Divinity - 2 years**
Eligibility: B.Th./B.Miss./B.C.S.

**Last Date** 30th Apr

For Details:

www.bethelbiblecollege.edu.in

bethelbiblecollegeguntur@gmail.com

https://www.facebook.com/bbcgunturap/

https://www.youtube.com/@BethelBibleCollegeGuntur

## Distance Courses

(Mediums: English & Telugu)

**Master of Christian Studies - 2 years**
Eligibility: B.D. or B.C.S. with 1 year of Ministerial Experience

**Bachelor of Christian Studies - 4 years**
Eligibility: Any Recognized Degree

**Bachelor of Christian Studies - 2 years**
Eligibility: Dip.C.S. Pass

**Diploma in Christian Studies - 2 years**
Eligibility: Intermediate / 10th Pass with 3 years of Ministerial Experience

**Diploma in Contextual Theologies - 1 year**
Eligibility: Intermediate Pass

**Diploma in Christian Education - 1 year**
Eligibility: Intermediate Pass

**Last Date** 31st Oct

4th Lane, Seethamma Colony, Pattabhipuram Post, Guntur - 522006, Andhra Pradesh

Contact: 0863 226 2832

**Note: The last date for the submission of application forms pertaining to the distance courses (English & Telugu medium) has been extended up to 30th**

## செய்தித்துளிகள்

1.‘காரிணி டிப்தீரியே’ கிருமியால் பரவும் ‘டிப்தீரியா’ நோயை கட்டுப்படுத்துகிற உயிர்-காக்கும் மருந்தான ‘டிப்தீரியா-ஆன்ட்டி-டாக்சின்\ பற்றாக்குறை காரணமாக பாகிஸ்தானில் 100-க்கும் மேற்பட்ட குழந்தைகள் உயிரிழந்துள்ளனர்.

2.ஆந்திர தலைநகர் அமராவதியை கொல்கத்தா சென்னை  ஹைதராபாத் நகரங்களுடன் இணைக்க ரூ.2,245கோடி செலவில் 57கி.மீ ரயில்-பாதையும் கிருஷ்ணா-நதி மீது 3.2கி.மீ மேம்பாலமும் அமைக்க ஒன்றிய அரசு ஒப்புதல்.

3.அரசுப் பள்ளிகளில் தற்காலிகமாக தோற்றுவிக்கப்பட்ட 7,979பணியிடங்களில் பணியாற்றும் பட்டதாரி ஆசிரியர்களுக்கு வரும் டிச.31-ம் தேதி வரை ஊதியம் வழங்க தமிழ்நாடு பள்ளிக் கல்வித்துறை உத்தரவு பிறப்பித்துள்ளது.

4.நங்கநல்லூர்-மெட்ரோ ரயில் நிலையம், ஓ.டி.ஏ-நங்கநல்லூர் சாலை (OTA-NANGANALLUR ROAD METRO) மெட்ரோ ரயில் நிலையம் என பெயர் மாற்றம் செய்யப்படுகிறது. தென்பிராந்திய ராணுவத் தளபதியின் கோரிக்கையை ஏற்று தமிழ்நாடு அரசு உத்தரவு.

5. ஸ்காட்லாந்து நாட்டின் கிளாஸ்கோ நகரில் 2026ம் ஆண்டு நடைபெறும் காமன்வெல்த் போட்டிகளிலிருந்து கிரிக்கெட், ஹாக்கி, பேட்மிண்டன், மல்யுத்தம், துப்பாக்கி-சுடுதல் ஆகிய போட்டிகள் நீக்கப்பட்டதால், இந்திய பதக்கவாய்ப்பு பாதிப்பு.

## குழந்தைகள் தினம் நல்வாழ்த்துக்கள்.

**CHILDREN’S DAY GREETINGS**

அன்பான இரட்சிப்பு பத்திரிக்கையின் வாசகர்கள், ஆதரவாளர்கள், படைப்பாளர்கள், அலுவலகப் பணியாளர்கள், வலைதளப் பணியாளர்கள், கைபிரதி களப்பணியாளர்கள், அனைத்து திருச்சபை இறை மக்கள் மற்றும் அச்சகத்து நண்பர்கள் ஆகிய உங்கள் அனைவருக்கும் எங்கள் உள்ளம்; கனிந்த குழந்தைகள் தினம்-2024 நல்வாழ்த்துக்கள்.

**HAPPY**

**CHILDREN’S DAY**

இரட்சிப்பு

ஊழிய-குடும்பத்தார்